★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.கத்தின் இதழ் [illegible] ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✻ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 10 சனி (25 8 56) ★ ★ வெளியூர்: ஆவணி 11௳ ஞாயிறு (26—8—56) [இதழ் 65

மைசூர்: மேற்கு மண்டலத்திலேயே இருக்குமாம்!

மாநிலங்கள் சபை முடிவு

புதுடில்லி, ஆக. 25—

மாநில புது அமைப்பு மசோதாவில், மண்டலக்கவுன்சில்களைப் பற்றிய எல்லா 'ஷரத்து'க்களையும் எவ்வித மாறுதலுமின்றி மாநிலங்கள் சபை நேற்று ஏற்றுக் கொண்டதாம்; அதாவது, 'மைசூர் மேற்கு மண்டலத்திலிருக்கக் கூடாது; தென்மண்டலத்தில் சேர்க்கப்படவேண்டும்' என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது!

காந்தீயத்திற்குச் சாவு மணி! பதவிவெறிக்கு வெற்றி மணி!

ஆந்திர காங்கிரசிற்குள் தலைமைப் போட்டி!

சஞ்சீவியாருக்கு எதிராகக் கையெழுத்துப் போராட்டம்!

கோபாலருக்கு ஆதரவுதர அமைச்சர் பதவிக்கு பேரம்!

என். ஜி. இரங்கா பெயர் இருள் சூழ்ந்துவிட்டது!

ஐதராபாத் இராமகிருஷ்ணுவேறு தலைநீட்டுகிருர்!

யாருக்குத்தான் அந்தப் பதவி காத்து இருக்கிறதோ?

(நமது அரசியல் நிருபர்)

விரிவாக்கப்பட்ட ஆந்திரப் பிரதேச சட்டசபை காங்கிரஸ் கட்சிக்கு இனி யாரைத் தலைவராகக் கொள்ளுவது என்பதில் ஆந்திரப் பிரதேசத் தலைவர்களுக்குள் கொந்தளிப்பு ஏற்படத் தொடங்கி இருக்கிறது.

தலைமைப் போட்டியில் மூவர் பெயர் முதல் முதலாக அடிபட்டது இப்பொழுது என். ஜி இரங்காவின் பெயர் மறக்கப்பட்டு விட்டது ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்துவரும் முதலமைச்சர் பி. கோபாலருக்கும், துணை முதலமைச்சர் சஞ்சீவியாருக்கும்தான் போட்டி இருந்து வருகிறது

முதலமைச்சர் கோபாலரை ஆதரித்து, முன்னாள் கிருஷிக் லோக் கட்சியைச் சேர்ந்தவர்களான ஐக்கிய காங்கிரஸ் சட்டசபை கட்சியைச் சார்ந்தவர்கள், உறுப்பினர்களின் கையெழுத்தை வாங்குவதில் சில நாட்களாகத் தீவிரம் காட்டி வருகின்றனர். வெளிப்படையாக நடைபெறும் இக்கையெழுத்துப் படையெடுப்பு, சஞ்சீவியாரின் 'எதிர்ப்பு முனை'யாக உருவெடுத்து வரத் தொடங்கி இருக்கிறது.

இப்பொழுது இருப்பது போலன்றி, எதிர்கால அமைச்சரவையில் தங்கள் வகுப்பினருக்கும் ஒரு அமைச்சர் பதவி தருவதாக வாக்களிக்கும் இருவரில் ஒருவருக்கே தங்கள் வகுப்பைச் சார்ந்த 20 சட்டசபை உறுப்பினர்கள் முழு ஆதரவையும் தருவது என்ற முடிவிற்கு 'தெலுகா' என்ற வகுப்பு சட்டசபை உறுப்பினர்கள் கருத்தறிவித்துள்ளனர். தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் கோபாலர் என்றே அவர்கள் கருதி உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் மற்றொரு உறுப்பாக உள்ள ஆறு பிரஜா கட்சி சட்டசபை உறுப்பினர்களும், யாரை ஆதரிப்பது என்ற முடிவிற்கு வருவதில் நிச்சயமற்று இருக்கிறார்கள்.

ஐக்கிய காங்கிரஸ் சட்டசபை கட்சியுடன் புதிதாக இணைய இருக்கும் தெலிங்கானா காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும் இரண்டு கோஷ்டியாகப் பிரிந்துள்ளனர். அந்த இரண்டில் ஒரு கோஷ்டி, ஐதராபாத் முதலமைச்சராக இருக்கும் பி. இராமகிருஷ்ண ராவ் ஏவல்படி இயங்கும் நிலையில் இருக்கக்கூடியதாம். மற்றொரு கோஷ்டியின் தலைவராக கே. வி. இரங்கா இருக்கிறார். மொத்த 51 தெலிங்கானா உறுப்பினர்களில், இரங்காவை ஆதரிப்பவர்கள் 18 பேர்களேதானு!.

இவ்விரு கோஷ்டிகளில் ஏதாவது ஒரு கோஷ்டி கோபாலரை தலைவராக ஏற்றுக்கொள்ள முந்தினால், மற்றொரு கோஷ்டி அதற்கு எதிராக சஞ்சீவியாரை ஆதரிக்க முன்வருமாம்.

அவ்விரு கோஷ்டிகளுக்கும் தலைவராகக் கோபாலரை ஏற்றுக்கொள்ளுவதா அல்லது சஞ்சீவியாரை ஒப்புக்கொள்ளுவதா என்பதல்ல முக்கிய பிரச்சினை; ஒரு கோஷ்டிக்கு எதிராக மற்றொரு கோஷ்டி செயல்பட்டு வருவது என்பதுதான் அதன் அடிப்படை இலட்சியம்!

ஆந்திரா, தெலிங்கானா ஆகிய இரண்டு பகுதிகளையும் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் ஒன்று கூடி மனந்திறந்து பேசி, போட்டியின்றி யாராவது ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்ற யோசனைக்கு, காங்கிரஸ் தலைவர்களிடை ஆதரவு இல்லை எனவும் தெரியவருகிறது.

தலைமைப் பதவி யாருக்கு என்பதில் கோபலருக்கும் சஞ்சீவியாருக்கும் ஏற்படும் மோதலில்; ஐதராபாத் முதலமைச்சர் தலைவராக ஆக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் நம்பப்படுகிறது. அத்தகு நிலை இறுதியாக ஏற்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

முடிவு கண்டு சிரித்தாராம்!

இலங்கைப் பிரதமரின் திமிரான பதில்

கொழும்பு, ஆக. 24—

'தமக்கும் சிங்களத்தைப்போல சம அந்தஸ்து வழங்காவிட்டால், சுதந்திரத்தமிழகம் கோரி நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவோம்' என்று தமிழரசுக் கட்சியினர் செய்துள்ள முடிவு பற்றிக் கருத்தறிவிக்குமாறு கேட்டபோது, பிரதமர் பண்டாரநாயகா, 'நான் முடிவுகளைக் கண்டேன்; எனக்குச் சிரிப்புத்தான் வந்தது; இதைத் தவிர நீண்ட விமர்சனம் எதும் வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன்' என்று பதிலளித்தாராம்!

'கூலி வரையறை வேண்டும் —கூலியையும் ஒழுங்காகத் தரவேண்டும்'

'குடியிருப்பு வசதியும் ஒரு திங்கள் ஓய்வும் தேவை'

மக்கள்சபைமுன் வீட்டு வேலைக்காரர் போர் முழக்கம்

புதுடில்லி, ஆக. 24—

'முதலாளித்துவத்தை முடிவுக்குக் கொண்டுவருக' என முழக்கமிட்டுக்கொண்டு, வீடுகளில் வேலைசெய்துவரும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வேலைக்காரர்கள், ஊர்வலமாகச் சென்று மக்கள் சபைமுன் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஊர்வலத்திலும், ஆர்ப்பாட்டத்திலும் சமபங்கு பெண்களும், வேலைக்காரச் சிறுவர்களும் கலந்துகொண்டு இருந்தனர்.

கூலிவரையறை, வரையறுக்கப்பட்ட கூலியை ஒழுங்காகக் கொடுத்தல், குடியிருப்பு வசதி, ஒரு மாத ஓய்வு முதலியனவே அவர்கள் கோரிக்கைகளில் முக்கியமானவையாகும்.

'உருது மொழியை வட்டார மொழியாக ஏற்றுக்கொள்க'

ஆர்ப்பாட்டத்தினரை முதலமைச்சர் சந்திக்க அச்சம்!

சட்டசபையில் ஒத்திவைப்பு முயற்சி

உருது மொழி ஆதரவாளர்கள் உத்திர பிரதேச சட்டசபை முன் ஆர்ப்பாட்டம்

லக்னோ, ஆக. 23—

உத்திர பிரதேச சட்ட சபைமுன் கூடி, இன்று காலை இரண்டாயிரத்திற்குக் குறையாத உருது மொழி ஆதரவாளர்கள், 'உருதுவை வட்டார மொழியாக ஏற்றுக்கொள்க' என முழக்கமிட்டனர்; முதலமைச்சரை நேரில் கண்டு தங்கள் கோரிக்கையைக் கூறவும் விரும்பினர்; ஆனால், முதலமைச்சரான டாக்டர் சம்பூரணனந்த், ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார்.

அதன் பிறகு ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கோரிக்கைகள் எழுதப்பட்டிருந்த சுவரொட்டியை சட்டசபை வெளிச்சுவரில் ஒட்டினர்.

உருதுவை வட்டார மொழியாக ஒப்புக்கொள்ள வேண்டுமென சட்டசபை உறுப்பினர்கள் சிலர் கையொப்பமிட்டுக் கொடுத்த மனுவை ஏற்க முடியாது என மறுத்துக் கூறிய முதலமைச்சரின் அறிக்கையைக் கண்டிக்குமுகத்தான், சட்டசபையில் ஒரு ஒத்திவைப்புப் பிரரேபணையைக் கொண்டுவர ஒரு உறுப்பினர் எடுத்துக்கொண்ட முயற்சியும் பலனளிக்காமல் போய்விட்டது.

தனிநாடு கோருவது வீண் பிரமையாம்

சுதந்திரக் கோரிக்கையைக் கைவிட்டால் நாகர் தலைவரைச் சந்திப்பாராம்

பிரச்சினையை இராணுவக் கண்ணோட்டத்துடன் அணுகவில்லையாம்

மக்கள் சபையில் நேருவின் ஏகாதிபத்திய வாதம்

'நாகர் பிரதேசத்திற்கு விரிவான சுதந்திரம் அளிக்கவேண்டும்' என்ற கோரிக்கைபற்றி மக்கள் சபையில் நேரு பண்டிதர் பேசும்போது, 'இந்த விவகாரம் இந்திய அரசியல் சட்டத்தின் 6-வது பிரிவுக்குத் திருத்தம் கொண்டுவருவதை உள்ளடக்கியதாகும்; ஆனால், இந்த விவகாரத்தில் உருவான திட்டம் எதுவும் வைக்கப்படுமானல் அது பற்றிப் பரிசீலிக்க நாம் தயாராக இருக்கிறோம், ஆனால், பர்மாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள சிறிய—இந்த இந்தியாவின் ஒரு மூலைப் பகுதிக்குச் சுதந்திரம் வேண்டுமென்பது வீண் பிரமை என்றே நான் கருதுகிறேன்' என்று குறிப்பிட்டாராம்.

"நாகர் தலைவரான பிசோவையும், அவரது இதர சகாக்களையும் நான் மீண்டும் சந்திக்கத் தயாராகவே இருக்கிறேன்; ஆனால் தனிநாடு வேண்டும்' என்ற கோரிக்கையை அவர்கள் கைவிட்டு விடவேண்டும்" என்றும் பண்டித நேரு சபையில் கூறினாராம்.

"மக்கள் சபை குழு ஒன்றை நாகமலைப் பகுதிக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரு உறுப்பினர் தெரிவித்த யோசனை குறித்து நேரு கூறியதாவது:—

"ஒரு மக்கள் சபைக்குழு என்ன செய்யப்போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை; அந்தக்குழு எங்கே போகும்? யாரைச் சந்திக்கும்? குழு எங்கெல்லாம் போகிறதோ அங்கெல்லாம் அவர்களைப் பாதுகாப்பதற்கென ஒரு இராணுவப் பிரிவை அல்லவா கூடவே அனுப்பவேண்டிவரும்?".

நாகமலைப் பிரதேச நிலை குறித்த விவாதத்தின்போது மேலும் நேரு 'இந்த நாகர் பிரச்சினையை முழுவதும் இராணுவப் பிரச்சினையாக நாங்கள் கருதவில்லை; இதனுல்தான், இராணுவக் கண்ணோட்டத்திலிருந்து எத்தனை வேகமாக நடவடிக்கைகள் எடுத்திருக்கப்பட வேண்டுமோ அத்தனை துரிதமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ளவில்லை' என்றும் கூறியிருக்கிறார்.

'இராணுவத்தினர் மிதமின்றி நடந்துகொண்டார்கள்' என்ற குற்றச்சாட்டை மறுத்துரைத்த நேரு, 'இராணுவத்தினர் சிற்சில தவறுகள் இழைத்திருந்தாலும் பொதுவாக, நிலைக்கு ஒப்ப நன்கு நடந்து வந்திருக்கின்றனர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை, ஆக. 22—

'நகர சபை உதவி எஞ்சினீயர் ஒருவரை சாலை பராமரிப்புப் பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பவேண்டும்' என்ற நகர சபையின் கோரிக்கையை [illegible] ஏற்க மறுத்து விட்டனர் என்று தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25—8—'56 சனி

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கனரகத் தொழில்களுக்கும் சிறு குடிசைத் தொழில்களுக்கும் சிறப்பளித்து இருப்பதுபோன்று, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கியத்துவம் காட்டப்பட்டிருந்தது. முதல் திட்டத்தின் நோக்கப்படியே காடு கரம்பாக இருந்த நிலப்பரப்புகள் பண்படுத்தப்பட்டு உணவு உற்பத்தி கணிசமாகப் பெருக்கப்பட்டிருப்பதாகப் புள்ளி விவரங்காட்டிப் பேசப்பட்டது.

உணவு உற்பத்தியில் இப்பொழுது நாம் தன்னிறைவு பெற்றுவிட்டதாகவும், இனி வெளிநாட்டிலிருந்து பெருந்தொகைக்கு மூல உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தாக வேண்டும் என்ற நெருக்கடியிலிருந்து நாம் விடுபட்டு விட்டதாகவும் அரசாங்கச் சார்பில் நேற்றுவரை காங்கிரஸ் அமைச்சர்கள் அறிவித்து வந்திருக்கிறார்கள்.

உணவுப் பொருளில் தன்னிறைவு பெற்றுவிட்டோம் எனக் கூறும் அளவுடன் அரசாங்கம் திருப்தி கொண்டுவிடவில்லை. வெளிநாடுகளுக்கும் உணவுப் பொருட்களை தாராளமாக ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நாம் அத்துறையில் விரைவில் வெற்றி பெற்று விடுவோம் எனவும் பிரதமர் மக்கள் சபையில் பூரிப்புடன குறிப்பிட்டார்.

அமைச்சர்கள் புள்ளி விவரங் காட்டி பூரிப்புடன் பேசியபடி, உணவு உற்பத்தித்துறையில் தன்னிறைவு ஏற்படவில்லை என்ற உண்மை, தினம் தினம் மூல உணவுப் பொருள்களின் விலை ஏறிவரும் நிலைமையால் தெளிவாகிவிட்டது. உணவுப் பொருட்களின் தீவிர விலை ஏற்றம், உற்பத்தி பெருகி வந்திருக்கிறது எனக் கூறிய அமைச்சர்களையும் தங்கள் கூற்றில் அவநம்பிக்கைகொள்ளச் செய்துவிட்டதுடன், திடுக்கிடவும் வைத்துவிட்டது.

இந்த அனுபவம் அமைச்சர்களுக்குப் புதிதல்ல. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கி மூன்றாண்டு காலங் கழிந்து வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதற்குப் பதிலாகக் கூடுவது கண்டதும், இவ்வாறுதான் அமைச்சர்கள் விழித்துக்கொண்டு அலறித் துடித்தார்கள்.

மூல உணவுப் பொருட்கள் எதிர்பாரா வகையில் தீவிரமாக விலை கூடிவருவதைக் கண்டதும், ஆந்தை விழிப்பதுபோல் அமைச்சர்கள் விழிக்கத் தொடங்கினர்; விளக்கம் பெற முடியாது குழம்பினர்.

இரண்டாவது திட்டத்தின் விளைவாக ஏற்பட்ட பண வீக்கம், உணவுப் பொருட்கள் தேவையான இடத்திற்கு உடனுக்குடன் கொண்டுசெல்வதற்குரிய போக்கு - வரத்து வசதிக் குறைவு, வியாபாரிகளின் முடக்கல் ஆகியவையே உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்திற்குக் காரணம் என அரசாங்கம் கூறத் தொடங்கியது. இந்த உண்மையைக் கண்டறிந்து கூறுவதற்கே அரசாங்கத்திற்கு ஆறு திங்களுக்குமேல் தேவைப்பட்டது. அதன் பிறகும் தயங்கித் தயங்கி நடவடிக்கையும் எடுக்க அரசாங்கம் முன்வந்தது.

ஏறிய விலையிலிருந்து இன்னும் உணவுப் பொருட்கள் இறங்கவில்லை. இவ்வகையில் அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை அரைமனதுடன் கூடிய ஆற்றலற்றது என்பதையே உணவுப்பொருட்களின் விலை இறங்காத்தன்மை மெய்ப்பிக்கிறது.

சாகுபடி நிலத்தின் பரப்பும், விளைவும் முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கூடி இருக்கிறது. அதன் பலனாக உணவு உற்பத்தியில் 32 சதவிகிதம் பெருகி இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. இதை மறுக்கும் வகையில் முன்னாள் உணவு மந்திரியாகவும் இன்னாள் உ. பி. கவர்னராகவும் இருந்து வரும் முன்ஷி அவர்கள் உணவு உற்பத்திப் பெருக்கம் 15 முதல் 17 சத விகிதம் வரைதான் இருக்கும் எனக் குறிப்பிடுகிறார்.

இந்தியத் துணைக் கண்டத்து மக்களில் எழுபத்தைந்து சதவிகிதத்தினர் இன்னும் அரை வயிறு கால் வயிறு அளவுதான் உண்டு வருகின்றனர். இவர்களில் சரி பகுதி பேர்கள் மேலும் கொஞ்சம் கூடுதலாக உண்ணத் தொடங்கினால், உணவுப் பொருள் பற்றாக்குறை உச்சம் பெற்றுவிடும். விலையும் இப்பொழுது இருப்பதைவிட இரண்டு மூன்று மடங்கு கூடிவிடும். அத்தகு நிலை ஏற்பட்டால், அதை எவ்வாறு இந்த அரசாங்கம் ஈடு செய்யப் போகிறதோ?

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனாக உணவுப்பொருள் 32 சதவிகிதத்திற்கு உயர்ந்திருக்கிறது எனப் பூரிப்புடன் பெருமை அடித்துக் கொண்டிருக்கும்பொழுதே, டில்லி அமைச்சர்கள் அதிர்ச்சி அடையும் வகையில், உணவுப் பொருட்களின் விலை தீவிரமாகக் கூடிவிடுவது ஒரு பக்கம் இருக்க, உணவுப் பற்றாக்குறையைப் போக்க 80 கோடி ரூபாய்க்கு உணவுபொருட்களை இறக்குமதி செய்வது என்றும் அந்த அரசாங்கம் முடிவிற்கு வந்துவிட்டது. மக்கள்சபையும் அதற்கு அனுமதி தந்துவிட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம உணவு உற்பத்தியைப்பெருக்கிவிட்டோம்; உணவுத் துறையில் தன்னிறைவை அடைந்து விட்டோம் எனக் காங்கிரஸ் கட்சியினர் அடுத்த பொதுத்தேர்தலில் தம்பட்டம் அடித்துக் கொள்ளத்தான் போகிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெற்று, உணவுத் துறையில் தன்னிறைவும் ஏற்பட்டு இருக்குமானால், உணவுப் பொருட்கள் கூடி விற்பது என்? வெளிநாடுகளிலிருந்து 80 கோடி ரூபாய்க்கு உணவுப் பண்டங்கள் இறக்குமதி செய்ய முனைந்தது ஏன்? எனப் பொதுமக்கள் கேட்கத்தான் போகின்றனர். அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்களோ இந்தக் கனவான்கள்!

ஐந்தாண்டுத் திட்டங்களைக் காட்டி நமது கழகம் தேர்தலில் போட்டியிட முன்வருமானால் அதைத் தாம் வரவேற்கத் தயாராக இருப்பதாக முதலமைச்சர் காமராசர் வீராப்பாகக் கூறிவருகிறார். மேல் குறித்துக் காட்டியுள்ள முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சூனிய பலனுக்கு, அந்த வீரப்புலி என்ன பதில் சொல்லப் போகிறதோ?

2,60,000 மாணவர்கள்

மாஸ்கோவில் உயர் கல்வி பெற்று வருகின்றனராம்!

சோவியத் நாட்டில் இளம் நிபுணர்களைத் தயாரித்துவரும் மிகப் பெரிய கேந்திரம் மாஸ்கோ நகரமேயாகுமாம்!

தற்பொழுது அங்கு 62 கல்லூரிகளும், 118 விசேடப் பயிற்சி உயர்நிலைப்பள்ளிகளும் உள்ளனவாம்!

இவற்றில் 2,60,000 மாணவர்கள் பயின்று வருகின்றனராம்!

நகருக்குப் புதிய போலீஸ் அதிகாரி

சென்னை, ஆக. 22—

சி. ஐ. டி., மற்றும் இரயில்வே போலீஸ் உதவி இன்ஸ்பெக்டர்—ஜெனரலான எப். வி. அருள் என்பார், சென்னை நகரின் புதிய போலீஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது கமிஷனராக உள்ள பார்த்தசாரதி ஐயங்கார் வடக்கத்தி இரயில்வேயின் தலைமை பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

இரண்டு இலட்சம் மின்சாரக் கடிகாரங்கள்

மாஸ்கோ நகரில் உள்ளனவாம்!

மாஸ்கோவின் தெருக்கள், பாதான இரயில் நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் தற்பொழுது சுமார் 2 இலட்சம் மின்சார கடிகாரங்கள் இருந்து வருகின்றனவாம்! இதல்லாமல் இவ்வாண்டில் புதிதாக 10 000 மின்சாரக் கடிகாரங்கள் மாஸ்கோ வீதிகளில் பொருத்தப்படுமாம்!

ஆலயங்களின் உபரி நிதி 'பள்ளி துவங்க உபயோகிக்கலாம்'

'மதச் சம்பிரதாயங்களுக்கு அது முரணானதல்ல'

மந்திரி சுப்பிரமணியம் பேசுகிறார்

திருநெல்வேலி, ஆக. 22—

"ஆலயங்களின் உபரி நிதியைப் பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கு உபயோகப்படுத்துவது, நம் மதச் சம்பிரதாயங்களுக்கு முரணானதல்ல; தற்போதுள்ள சட்டம் இத்தகைய உபயோகத்துக்கு இடமளிக்காமல் இருக்குமானால் அச்சட்டத்தை உடனடியாகத் திருத்துவதற்கான காலம் வந்துவிட்டதெனலாம்"

என்று மாநில கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், திருச்செந்தூரில் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பகல் உணவு அளிக்கும் திட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலில் உபரி வருவாயிலிருந்து ஒரு கல்லூரி நிர்மாணிக்கவேண்டும்' என்று மாவட்டக் கழக உறுப்பினர் ஒருவர் அக்கூட்டத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

எஞ்சினீயரிங் தொழிற்சாலைகள்!

கோவையில் நிறுவப்படும் வாய்ப்புகள் உள்ளனவாம்

கோவை, ஆக 23—

"கோவையைச் சுற்றிலும் எஞ்சினீயரிங் தொழிற்சாலைகள் நிறுவப்படும் வாய்ப்புகள் உள்ளன," என்று, மத்திய தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ கூறியிருக்கிறார்.

குன்னூரில் நடைபெற்ற மத்திய தேயிலை போர்டு கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிய அவர், கோவையில் உள்ள சில எஞ்சினீயரிங் தொழில்களையும் பார்வையிட்டாராம்.

'தட்சிணப் பிரதேசம் என்ற பேச்சே கூடாது'

'தமிழ் நாட்டு நலன்களைப் பேணுங்கள்'

காங்கிரசாருக்குப் பூதான முனிவர் இடித்துரை

கோவை, ஆக. 23—

"தமிழ் நாட்டின் நலன்களுக்காகப் பாடுபடுபவர்களானால் காங்கிரசார், 'தட்சிணப் பிரதேசம்' என்ற பேச்சையே விட்டுவிட வேண்டும்"

என்று ஆச்சாரியா பாவே, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் கூட்டத்தில் இடித்துரைத்திருக்கிறார்.

"தென்னாட்டிற்கு ஒரு பல மொழி மாநிலம் வேண்டும் என்ற விவகாரத்திற்கு உயிரூட்டிக்கொண்டே இருந்தால் குழப்பம்தான் அதிகரிக்கும். இப்போது இருப்பவற்றோடு சேர்த்து மேலும் ஒரு அரசியல் கட்சி முளைக்கும். இப்போதுள்ள தமிழ் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக நீங்கள் பாடுபடுங்கள்"

என்றும் அவர் எடுத்துரைத்திருக்கிறார்.

எவ்வளவு தெரியுமா?

இந்தியாவில் 1955-56ல் மொத்தம் ரூ 19 94 00 000 மதிப்புள்ள மின்சார இயந்திர சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டனவாம்.

தகவல் சேர்க்கப்பட்டு வருகிறதாம்!

கொழும்புத் திட்டப்படி சென்ற ஐந்தாண்டு காலத்தில் (1956 சனவரி வரையில்) இந்தியாவுக்குக் கிடைத்த உதவிப்படி மொத்தம் 102 நிபுணர்கள் வந்திருக்கிறார்களாம்!

'அதே கால அளவில் விசேடப் பயிற்சிக்காக வெளிநாடு சென்ற மாணவர்கள் எண்ணிக்கை 667: இது சம்பந்தமாக ஏற்பட்ட செலவு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன' என்று, மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

தெரிந்து கொள்ளுங்கள்

இந்தியாவில் 1955—56ல் ரூ. 13,09,000 மதிப்புள்ள வைரக் கற்களும், 1954 — 55-ல் ரூ. 10,09,000 மதிப்புள்ள வைரக் கற்களும் நெதர்லண்ட்ஸ், பெல்ஜியம், பிரிட்டன், டென்மார்க், ஜான்சிபார் முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனவாம்.

தற்போதைய தேர்தல் முறை

'அதிகச் செலவுள்ளது; பழுவானது'

'ஏழைகள் சட்டசபைக்கு வர முடிவதில்லை'

ஒரிசா முதன் மந்திரி கருத்து

கட்டாக், ஆக. 22—

"சட்டசபை உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வசதியான வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். நிலச் சீர்திருத்தச் சட்டங்களையும், அது போன்ற இதர சமூக மாறுதல்களையும் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருவதற்கு இது பெருந்தடையாக இருந்து வருகிறது. தற்போதைய தேர்தல் முறை அதிக செலவுள்ளதாகவும், பளுவானதாகவும் உள்ளது; எனவே ஏழைகள் சட்டசபைக்கு வரமுடிவதில்லை."

என்று ஒரிசா நிலக்கொடை இயக்க மாநாட்டில் பேசிய ஒரிசா முதன் மந்திரி நவக்கிருஷ்ண சௌத்ரி குறிப்பிட்டிருக்கிறார்.

★

'நீதியான—தெளிவான முறைகள் அவசியம்'

அந்த மாநாட்டில் பேசிய பம்பாய் கவர்னர் அரிகிருஷ்ண மகதாப் குறிப்பிட்டதாவது:—

"மாநிலத்தில் நிலக்கொடை இயக்கத்தை நடத்துவதற்கு நீதியான—தெளிவான முறைகளை மேற்கொள்ளவேண்டும். ஒரு பக்கம் உன்னத மனநோக்கத்துடனும், மறுபக்கம் தாழ்ந்த கருத்துக்களுடனும் வேலை செய்தால் அகிம்சை உள்ள சமூக அமைப்பை நிறுவும் நோக்கம் கைகூடாமல் போகும்; நீதி நெறி முறைகள் குறைந்துவிடும்.

"அகிம்சை சமுதாயத்தை நிறுவுவதற்கென்று கூறி நூல் நூற்றலை மக்களிடத்தில் கட்டாயமாகத் திணித்தால் அது ஒரு பயனும் அளிக்காது. இவ்வியக்கம் தனது குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நீதியான—தெளிவான முறைகளே மிகவும் அவசியமாகும்."

ஐசனோவர்—ஸ்டீவன்சன் போட்டி

சான்பிரான்சிஸ்கோ, ஆக. 23—

இப்போது குடியரசுத் தலைவராக உள்ள ஐசனோவர் மீண்டும் இந்த நவம்பர் திங்களில் குடியரசுக் கட்சிச் சார்பில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுகிறார்.

துணைத் தலைவர் பதவிக்கும் இப்போதுள்ள நிக்ஸனே ஜனநாயகக் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சென்ற 1952-ம் ஆண்டுத் தேர்தலில், அமெரிக்க ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஸ்டீவன்சனே இப்போதும் ஐசனோவரை எதிர்த்துப் போட்டியிடுகிறார். அவரது ஜனநாயகக் கட்சி சார்பில், கேபாவர் என்பார் துணைத் தலைவர் தேர்தலுக்கு நிற்கிறார்.

தமிழ் இலக்கியக் கழகத் துவக்க விழா

அண்ணாமலை, ஆக. 21—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியக் கழகத் துவக்க விழா 18—8—56-ல், பட்டமளிப்பு மன்றத்தில் சிறப்புற நடைபெற்றது. செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்.

நாகர்கோயில் இந்துக் கல்லூரி முதல்வரும் சிறந்த பொருளாதார நிபுணருமாகிய டாக்டர் ப. நடராசன் அவர்கள் துவக்க உரையாற்றினார்.

தலைமையுரையில் சிதம்பரநாதனார் அவர்கள் டாக்டர் ப. நடராசன் அவர்களைக் குறிப்பிட்டு, அன்னார் தமிழ்த் தொண்டாற்றும் பலரில் தகைமைசான்ற ஓர் தலைமகன் என்று குறிப்பிட்டார்.

கருமேகங்களைக் கண்டு அஞ்சாதே-துணிந்து நில்!

டாக்டர் ப. நடராசன் அவர்கள் தமது உரையின்போது குறிப்பிட்ட சில கருத்துக்களாவன :—

"தமிழருக்கு தமிழ் நாடு என்ற ஓர் தனி நிலப்பரப்பு வேண்டும். அதில் தமது மொழி ஆட்சிமொழியாக அமையவேண்டும். மற்றும் அங்குள்ள கல்வி நிலையங்களில் தமிழே பயிற்றுவிக்கும் மொழியாக அமைதல் வேண்டும் இதனைச் சொல்லும்பொழுது பலர், 'தமிழர் மொழி வெறி கொண்டவர்களாக மாறுகிறார்கள்' என்கிறார்கள். புனா பல்கலைக் கழகத்திலாயினும்சரி, புனாவிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களிலாயினும்சரி ஒருவர் தொடர்ந்து பணியாற்ற விரும்பினால், அவர் மராத்தி மொழியில் ஒரு தேர்வு எழுதி அதில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்; குசராத்திக் கல்வி நிலையங்களிலும் இது போன்ற நிலையே உள்ளது

"நம்மைப்பார்த்துச்சிலர், 'தமிழ் நாடு என்ற தனி நிலப்பரப்பு ஏன் கேட்கிறாய்? அத்தகு உணர்வு கொள்வதே தவறு' என்று கூறி, 'தமிழர்கள் அத்தகைய உணர்வை ஒழித்து, 'இந்தியா' என்ற நிலப் பரப்பின் மீதும், 'இந்தியன்' என்ற உணர்வின் மீதும் பற்றுக்கொள்ளுதல் வேண்டும்' என்கிறார்கள்; அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்—'இந்தியா என்ற நிலப் பரப்பும், இந்தியன் என்ற உணர்வு மட்டும் வேண்டும் என்று கூறாமல், உலகம் என்ற நிலப்பரப்பும் உலகக் குடிமகன் என்ற உணர்வும் கொண்டு இந்தியா—இந்தியன் என்ற உணர்வுகளை ஒழித்துவிடலாமல்லவா?

"தமிழன் என்று 'தமிழன்'என்ற உணர்வு பெறுகிறானோ அன்றே அவன் வாழ்வில் மறுமலர்ச்சி மிளிரும். இத்தகைய மறுமலர்ச்சி எண்ணங்கள் தமிழர் உள்ளங்களில் எழும்போது கருமேகங்கள் உருட்டுகின்றன. தமிழா! அக்கருமேகங்களைக் கண்டு அஞ்சாதே! துணிந்து நில்! உன் வாழ்வில் வளம் துலங்கும்."

'தமிழ் நாடு' என்று ஏன் பெயர் மாற்றக்கூடாது?

டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் பேசிய பேச்சின் சுருக்கம் :—

"'தமிழ் நாடு' என்ற பெயர் வேண்டும் என்ற கருத்தினைத் தமிழ்ப் பற்று மிகுந்தவர்கள்தான் கூறமுடியும் 'தமிழ் நாடு என்ற பெயர் வேண்டும்' என்று தமிழர்களில் பெரும்பாலானோர் முடிந்த முடிவாகக் கூறியுள்ளார்கள். இதனைக் கூறும்பொழுது, 'பெயரை மாற்றுவதென்பதேது? தமிழ் நாடு என்ற பெயர் எங்கும் இருந்ததில்லை' என்கிறார் ஒரு நண்பர். தமிழ் நாடு என்றே வழக்கில் இருந்து வந்தது என்பதனைப் பல ஆதாரங்களோடு பலவிடங்களில் விளக்கப்பட்டுள்ளது. மற்றொன்று, 'பெயரை மாற்றுவதேது?'—என்பது இதனைக் கூறுவார் கவனத்திற்கு ஒன்றினைக் கொண்டுவர விரும்புகிறேன்—பிரிட்டிஷ் ஆட்சியின் போது ஏற்பட்ட சட்ட நூலிலும், 'யுனைடெட் பிராவின்சஸ்' (United Provinces) என்ற பெயரே இருந்தது. அந்நிலப் பரப்பின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குச் சென்ற பின்னர், அச்சட்டத்திற்கு ஓர் திருத்தம் கொண்டுவந்து, 'ஐக்கிய மாகாணம்' என்ற பெயரை 'உத்தரப் பிரதேசம்' என மாற்றினார்கள்; அது போல் ஏன், 'சென்னை' என்ற பெயரை 'தமிழ் நாடு' என்று மாற்றக்கூடாது? அவ்வாறு மாற்றும் விருப்பதற்குத் துணையாகச் சில அரசியல் காரணங்களைக் கூறுகிறார்கள்; இஃது இலக்கியக் கழகமானதால் அவைகளைத் தொட விரும்பவில்லை.

"ஆனாலும் தமிழ் நாடு என்ற பெயர் ஏற்படும் என்றே நம்புகிறேன். இத்தேர்தலுக்குப் பின்னர் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து நம்முடைய பிரதிநிதிகள் ஓர் திருத்தப் பிரேரணை கொண்டுவந்து சென்னை என்ற பெயரை மாற்றலாம் அதனால் எவரேனும், 'சட்டம் என்பது நிலை பேறுடையது' எனக் கருதினால் அது தவறு; குடியாட்சியில் மக்கள் தங்கள் நலனுக்கும் விருப்பத்திற்கும் ஏற்பச் சட்டங்களை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

'இந்திக்குச் சிறிதும் இடந் தரக்கூடாது'

"இந்தியா எங்கும் பொதுமொழி என்று கூறப்படும் இந்தியே கற்பிக்கும் மொழியாதல் வேண்டும் என்ற கருத்து மீண்டும் தலைதூக்குமானால் நாம் அதற்குச் சிறிதும் இடந்தருதல்கூடாது. அப்பொழுது நாம் மிகவும் விழிப்பாக இருந்து தமிழ்மொழியைப் பயிற்றுவிக்கும் மொழியாக்கிவிடல் வேண்டும். தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலமும் இந்தியும் நமக்கு ஒன்றுதான் இந்தி நம் அண்ணன் தம்பியோடு உடன் பிறந்த மொழியுமன்று.

"ஆனால், இந்தியைக் காட்டிலும் ஆங்கிலத்தால் உலகின் பல செய்திகளை அறிந்துகொள்ளவும், பல நூல்களைக் கற்றுத் தெளியவும் முடியும் அத்தகைய நிலையை ஏற்படுத்திக் கொள்வோர் தொகை நூற்றுக்குப் பத்து இருபதாக இருப்பினும் நாம் ஆங்கிலத்தைப் பேணி வளர்த்துப் போற்றல் வேண்டும்.

"நூற்றைம்பது ஆண்டுகளாக ஆட்சிசெய்த ஆங்கிலேயரின் ஆங்கிலத்தில், நாட்டுப்புற மக்களிடையே பேசினால் அது அவர்களுக்கு எள்ளளவும் புரிவதில்லை. அது போல, இந்தியை நாம் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு ஐம்பது அறுபது ஆண்டுகள் கற்றபின் அவர்களிடம் சென்று பேசினாலும் அவர்களுக்கு அது புரியாத மொழியாகவே இருக்கும்."

'மதுவிலக்கு முழு வெற்றி பெறவில்லை'

'கள்ளச் சாராயம் காய்ச்ச பணக்காரர்கள்உதவுகிறார்கள்'

போலீஸ் அதிகாரிகள் ஒப்புதல்

சென்னை, ஆக. 22—

சென்னை நகரில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோருக்கு, பணக்காரர்கள் உதவி செய்கின்றனர் என்றும் இதை இவர்கள் ஒரு இலாபகரமான தொழிலாக நடத்தி வருகின்றனர் என்றும், இலங்கை மதுவிலக்குக் குழுவினிடத்தில் குற்ற இலாகா உதவி போலீஸ் அதிகாரி கூறியிருக்கிறாராம்.

நகரில் மதுவிலக்கு அமுல்செய்யப்பட்டிருக்கிறது என்றும், இது சுமாராகத்தான் வெற்றிபெற்றுள்ளது என்றும் அவர் ஒப்புக்கொண்டுள்ளாராம்.

உயர் வகுப்பினர்—நடுத்தர வகுப்பினரிடையே குடிப்பழக்கம் இல்லை என்றும், இவர்களில் ஒரு சிலர் எப்போதாகிலும் உயர்ந்த ரக அன்னிய மதுக்குடியில்மட்டும் ஈடுபடுகின்றனர் என்றும், ஆனால் தொழிலாளர் பகுதிகளிலும், சேரிகளிலும் குடிப்பழக்கம் மிகுந்திருப்பதாயும் அந்தப்போலீஸ் அதிகாரி இலங்கைக் குழுவிடத்தில் தெரிவித்திருக்கிறார்.

நகரில் உள்ள தோப்புகளிலும் புறம்போக்கு நிலங்களிலும், குன்றுகளிலும், நதிப்படுகைகளிலும் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது என்றும் போலீசாரைக் கண்டதும் அவர்கள் சாராயத்தையும், காய்ச்சும் கருவிகளையும் விட்டுவிட்டுப் போய்விடுகின்றனர்என்றும்,போலீசார் அவற்றை நாசம் செய்துவிடுவதாயும் போலீஸ் அதிகாரி ஷெனாய் தகவல் தந்திருக்கிறார்.

நன்றி

★

"எனது மகன் செல்வன் காங்கேயனுக்கும்—செல்வி மங்களம்மாளுக்கும் 19-8-56ல் பேளுக்குறிச்சியில், அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்த விழாவில் கலந்துகொண்ட நண்பர்கள் யாவருக்கும், மணமக்களை வாழ்த்திக் கடிதங்களும் தந்திகளும், வாழ்த்து மடல்களும் பரிசுகளும், புத்தகங்களும் வழங்கியவர்களுக்கும் இதன் மூலம் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று தோழர் ஜி பி. சோமசுந்தரம் அவர்கள் அறிவிக்கிறார்.

பொதுச்செயலாளருக்கு வேலூர் (சேலம்) ஊராண்மை கழக வரவேற்பு

நகரில் சிறப்பான நிகழ்ச்சிகள்

வேலூர், (சேலம்) ஆக. 23—

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, வேலூர் (சேலம்) ஊராண்மைக் கழகச் சார்பில் இன்று மாலை மகத்தானதோர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஊராண்மைக் கழகத் துணைத் தலைவர் தோழர் எஸ் நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில், உறுப்பினர் தோழர் எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் பொதுச்செயலாளரிடம் வரவேற்பு இதழை வாசித்துக் கொடுத்தார்.

தமக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பொதுச்செயலாளர் அவர்கள் பேசும்போது, ஊராண்மைக் கழகம், நகராட்சி மன்றம், மாவட்ட ஆட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்குக் கட்சியின் பேரால் போட்டியிடுதல் கூடாது என்றும், ஊரின் நன்மைக்காகப் பாடுபடுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும், ஊராண்மைக் கழகம், நகராட்சிக் கழகங்கள் போன்றவை எல்லாம், இயற்றிவைக்கப்பட்ட சட்டங்களை நிறைவேற்றுவனவேயன்றிப் புதியதாகச் சட்டம் இயற்றுவன அல்லவென்றும் குறிப்பிட்டு, இதுபோன்று எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் இதுபோன்று வரவேற்புகள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர் தேநீர் விருந்து நடைபெற்றதும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஊராண்மைக் கழக நிர்வாக அதிகாரிகள், உறுப்பினர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

தலைவர் நன்றி நவிலலுடன் மாலை 6½ மணிக்கு விழா முடிவுற்றது.

★

பொத்தனூரில் வரவேற்பு - ஊர்வலம்

வேலூர் ஊராண்மைக் கழக வரவேற்பு முடிவுற்றதும் மாலை 6½ மணியளவில் தோழர் வி. ஏ. இராமநாதன் அவர்கள் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது

பொத்தனூரில் முக்கியத் தெருக்களின் வழியாகப் பொதுச்செயலாளர் அவர்கள் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் அமர்த்தப்பட்டு, ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

பொத்தனூர் வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத அளவுக்கு வரவேற்புத் தட்டிகளும், மாவிலைத் தோரணங்களும், கொடிச் சண்டாக்களும், வாழை மரங்களால் அலங்கரிக்கப்பட்டத் தோரணங்களும் அமைக்கப்பட்டிருந்தன; முக்கியத் தெருக்களில் பந்தல்களும் அமைக்கப்பட்டன.

கழகக் கொடிகளால் படகு போல் அமைக்கப்பட்ட மாட்டு வண்டியில் பொதுச்செயலாளர் அழைத்துச் செல்லப்பட்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது; சுமார் 300-க்கு மேற்பட்ட சைக்கிள்களுடனும், தாரை, தப்பட்டை போன்ற இசைக் கருவிகள் முழக்குதலுடனும் ஊர்வலம் சுமார் 3-4 பர்லாங் தூரம் கொண்டதாக அமைந்திருந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்கு முன்பு பொதுச்செயலாளர் அவர்கள் நோயால் காய்ந்த வெற்றிலைக் கொடிக் கால்களைப் பார்வையிட்டு, வெற்றிலைக் கொடிக் கால்களுக்கு எவ்வாறு நோய் பரவுகிறதென்பதை உற்பத்தியாளர்கள் மூலம் தெரிந்துகொண்டார்.

மாலை 7 மணிக்கு, ஊர்வலம் பொத்தனூர், திரு வி. க. திடலை அடைந்ததும், தோழர் வி. காளியப்பன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். தோழர் எஸ். அப்பாவு, வி. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசினபின், பொதுச்செயலாளர் அவர்கள் நீண்டதோர் விரிவுரையாற்றினார்.

பொதுச்செயலாளர் அவர்களுக்குப் பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்கச் சார்பில் வெற்றிலை மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. பொத்தனூர், வேலூர், வெங்கரை, அனிச்சம்பாளையம், ஆரூர் ஆகிய கிளைகள் சார்பில் வரவேற்பிதழ்களும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. கல்லூர் சந்தம்பாளையம், குன்னிப்பாளையம், பொத்தனூர் இளைஞர் நாடக மன்றம், சுல்தான்பேட்டை செசவாளர் சங்கம் ஆகியவை சார்பில் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. மலர் மாலைக்காகவும், 'மன்றம்' வளர்ச்சிக்காகவும் பாண்டமங்கலம், குளக்காட்டுப்புதூர், மோகனூர் கிளைகள் சார்பில் நிதி அளிக்கப்பட்டது. (ச. கி.)

தேஷ்முக் குற்றச்சாட்டுகள் உண்மையல்லவாம்!

பண்டித நேரு காலங்கடந்து ஓலமிடுகிறார்

புதுடில்லி, ஆக. 23—

"முன்னாள் நிதிமந்திரி தேஷ்முக் கடந்த ஜூலை 28-ந் தேதியன்று, மக்கள் சபையில் தாக்கல் செய்த அறிக்கை கண்டு, மந்திரி சபையில் உள்ள எனது நண்பர்கள் மிகவும் கவலையடைந்திருக்கின்றனர்.

"இந்த விவகாரத்தை அவர்களே தீர்க்கமாகப் பரிசிலனை செய்தனர்; ஏனெனில், அந்த அறிக்கை மந்திரி சபை முழுவதையும்—அதில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் பழி சொல்லுவதாக உள்ளது.

"அந்த அறிக்கை, இந்தியாவின் ஜனநாயக வளர்ச்சி பற்றி ஒரு தவறான கருத்தைக் கூறுகின்றது. இந்தியாவில் உள்ள பார்லிமெண்டரி சர்க்காரின் அமைப்பு உள்ளடக்கம் பற்றிய தவறான கருத்தை ஊட்டுகிறது.

"மந்திரி சபையில் உள்ளோரிடையே இருக்கவேண்டிய உறவு பற்றியும், மந்திரி சபையில் கூட்டுப் பொறுப்பில்லாதிருப்பது குறித்தும் தேஷ்முக் கூறியிருப்பது, முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும். தேஷ்முக் குறிப்பிட்டுள்ள ஓரிரண்டு சம்பவங்கள்கூட உண்மையானவை அல்ல,"

என்பதாக பிரதமர் பண்டித நேரு, நேற்று மாநிலங்கள் சபையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

மத்திய செயற்குழு

(Working Committee)

9—9—56 ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை—இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மணிக்கு 1,000 மைல்!

பறந்த ஜெட் விமானம்

மொஜேவ் (கலிபோர்னியா) ஆக. 22—

மணிக்கு 1,000 மைல்வேகத்தில் பறந்து ஜெட் விமானம் ஒன்று புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகளுக்குக் கடன் தருவதற்குத் திட்டம்

சென்னை மாநிலத்திலுள்ள கூட்டுறவு நில அடமான பாங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு மொத்தம் ரூ. 65 இலட்சம் கடன் தருவதென அதன் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்; அன்றியும், புதிதாக 6 நில அடமான பாங்கிகள் ஏற்படுத்தப்படுமாம். சென்ற ஆண்டில், விவசாயிகளுக்கு ரூ. 55 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

26—8—56 காலை 9 மணிக்கு, சென்னை 8-வது வட்ட மக்கள் மன்றச் சார்பில், 17, திருப்பள்ளி தெருவிலுள்ள மன்ற அலுவலகத்தில், 'ஐந்தாண்டுத் திட்டமும் - தென்னாடும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்; தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமை தாங்குவார்.

* * *

26-8-56 காலை 10 மணியளவில் சென்னை—வண்ணை இளங்கோ கலை மன்றப் பணிமனையில், தோழர் செங்கேணி தலைமையில், 'தேர்தலும்—ஜனநாயகமும்' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில்

அண்ணா
என்.வி.நடராசன்

27—8—56 மாலை 6-மணிக்கு, சென்னை—வேளாளத் தேனாம் பேட்டை, வரசித்தி விநாயகர் கோயில் தெருவில் (போலீஸ் நிலையம் எதிரில்), தோழர் அ. கோ. அரசு தலைமையில், துவக்கவிழா நடைபெறும். அண்ணா அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் ஏ. டேனியல் ஆகியோரும் பேசுவர்.

கடலூர் நகரசபை காங்கிரஸ் கட்சி கலைக்கப்பட்டது

கோஷ்டிச் சண்டையே காரணம்

சென்னை, ஆக. 24—

கடலூர் நகரசபைக் காங்கிரஸ் கட்சி இன்று, தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகக் குழுவின் முடிவுக்கு ஒப்பக் கலைக்கப்பட்டது என்று தெரியவருகிறது.

32 உறுப்பினர்கள் கொண்ட கடலூர் நகரசபையில் 19 காங்கிரசார் இருந்தனர்; தலைவரும் காங்கிரசார்தான்.

இந்த 19 உறுப்பினர்களிடையே சில நாளைக்கு முன்பு தகராறு எழுந்தது. இந்தத் தகராறினைத் தீர்த்துவைக்க முயன்ற கக்கன் தோல்வி கண்டார்.

அதை ஒட்டி, காங்கிரஸ் கட்சியில் ஒழுங்குமுறை தவறி நடந்து கொள்பவர்களை வைத்துக்கொள்வதற்கில்லை என்று கூறி நகரசபைக் காங்கிரஸ் கட்சியையே தமிழ் நாடு கமிட்டி கலைத்துவிடத் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

உறுப்பினர் கேள்விக்குக் கேலியாகப் பதில் சொன்ன உதவி மந்திரி

மக்கள் சபையில் கண்டனம்

புதுடில்லி, ஆக. 24—

''சென்னையிலிருந்து டில்லி செல்லும் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசில் வழங்கப்படும் உணவு படுமோசமாயுள்ளது''

என்று தோழியர் அம்மு சுவாமிநாதன் மக்கள் சபையில் புகார் செய்தனர்.

இதற்குப் பதிலளித்த இரயில்வே உதவி மந்திரி அழகேசன் 'உறுப்பினருக்கு வயதாகி விட்டதால் எதையும் மிகைப்படுத்திக் கூறுகிறார் போலும்' என்று கிண்டலாகப் பதில் கூறியிருக்கிறார்.

அம்மு சுவாமிநாதனுக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்திருந்த தோழர் பெரோஸ் காந்தி உடனே எழுந்து, உறுப்பினர்களின் கேள்விக்கு உதவி மந்திரி கிண்டலும் கேலியுமாகப் பதில் சொல்வதை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

தலைவர், 'ஒரு பெண் உறுப்பினரின் வயது பற்றி இங்கு பேசப்பட்டது வருந்தத்தக்குரியதுதான்; மந்திரி தவறாக எதும் நினைத்துக் கூறியிருக்கமாட்டார் என்று கருதுகிறேன்; மந்திரியும் உறுப்பினரும் ஒரே இடத்திலிருந்து வருபவர்கள்; ஒருவருக்கொருவர் மரியாதை பாராட்டுபவர்கள் என்று கருதுகிறேன்' என்று சிரிப்புக்கிடையே கூறியிருக்கிறார்.

உதவி மந்திரி அழகேசன், 'நான் கூறிய பதில் முறை தவறியதுதான்; அதற்கு வருந்துகிறேன்; தோழியர் அம்மு சுவாமிநாதன் எனக்கு மதிப்பிற்குரிய நண்பர்; ஆனால் நான் சபையில் எப்போதும் இதுபோன்று பேசுபவனல்ல; சபையையும் ஒவ்வொரு உறுப்பினரையும் மரியாதைக் குறைவாக நடத்தியதே இல்லை' என்று கூறி வருத்தப்பட்டிருக்கிறார்.

தலைவரும், 'உதவி மந்திரி எப்போதும் உறுப்பினர்களின் கேள்விகளுக்குத் தகுந்த முறையிலேயே இதுவரை பதிலளித்து வந்திருக்கிறார்; நான் அவருக்கு 'லகான்' போடும் சந்தர்ப்பம் வந்ததும் கிடையாது; விவகாரங்களை நன்றாகப் படித்துவிட்டுத்தான் அவர் பதில் கூறி வந்திருக்கிறார்; என்று கூறியிருக்கிறார்.

உடனே மூர் என்ற உறுப்பினர் 'அது அவர் வேலை - கடமையாயிற்றே!' என்று கூறினாராம்.

'உண்மைதான்; எத்தனை பேர் தங்கள் வேலையை ஒழுங்காகச் செய்கிறார்கள்?' என்று தலைவர் கேட்டாராம்!

தோழியர் அம்மு சுவாமிநாதன் எழுந்து, 'என் வயது பற்றி மந்திரி குறிப்பிட்டதை நான் பொருட்படுத்தவில்லை (சிரிப்பு); ஏனெனில், எனது வயதினை, பிரமுகர்கள் பற்றிய குறிப்பில் வெளியிட்டிருக்கிறார்கள் (மேலும் சிரிப்பு); ஆனால், எனது கேள்விக்கு மந்திரி தந்த பதில் சபையின் கௌரவத்திற்கு உரியதாக இல்லை; எனக்கு இளமையில் இருந்த ருசிதான் இப்போதும் இருக்கிறது; ஆனால், கிராண்ட் ட்ரங்க்எக்ஸ்பிரசில் வழங்கப்படும் உணவு மிக மிகமிக மோசமாயுள்ளது,' என்று பெரும் சிரிப்பிற்கிடையே பதில் கூறியிருக்கிறார்.

தலைவர், மந்திரியின் பதிலை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றி விடுமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

சென்னை — இரங்கூன்

நேரடிக் கப்பல் போக்கு-வரத்து

சென்னைக்கும்—இரங்கூனுக்கும் இடையே நேரடிக் கப்பல் போக்கு-வரத்து மீண்டும் எட்டு மாதங்களுக்குப் பிறகு துவங்கிவிட்டது.

வரும் ஆக. 28-ந் தேதியன்று, 'சோனுவதி' என்ற கப்பல் சென்னையிலிருந்து இரங்கூனுக்குப் புறப்படுகிறது.

இந்த நேரடிக் கப்பல் போக்கு-வரத்து நிறுத்தப்பட்டபோது சென்னையில் கிளர்ச்சி ஏற்பட்டது. மத்திய மந்திரி பல நாளுக்கு முன்பே, 'திரும்பவும் கப்பல்விடுவோம்' என்று வாக்குறுதியளித்திருந்தார்; ஆனால், அவரது உறுதிமொழி நிறைவேற இவ்வளவு நாளாகியிருக்கிறது.

'சோனுவதி' சில நாள் மட்டுமே ஓடும் என்றும் பின்னர் பெரிய கப்பல் ஒன்று விடப்படும் என்றும் கூறப்படுகிறது.

இந்தப் போக்கு-வரத்தை நடத்திக்கொண்டிருந்த 'ஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தை சர்க்கார் ஏற்று நடத்துகின்றனர்.

கழகக் கூட்டம்

★

சென்னை – புளியந்தோப்பு:

பார்த்தசாரதி நாயுடு தெரு பின்புறமுள்ள திடலில்

தி. மு. கழக 6-ம் ஆண்டு விழா— மு. நு. அருணாசல நினைவு நூலகத் திறப்பு விழா

26—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: தி. சு. நல்லதம்பி

நூலகத் திறப்பாளர்: சா. கோ. நாராயணசாமி

பேசுவோர்: அண்ணா, சத்தியவாணிமுத்து

★

சென்னை-14-வதுவட்டம்:

அண்ணாபிள்ளைத் தெருவில் (கொத்தவால்சாவடி அருகில்)

26—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: ரே. பாரி

பேசுவோர்: சி. பி. சிற்றரசு, ஏ. கே. வில்வம்

★

தஞ்சை:

திலகர் திடலில்

27—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: எ. வி. பதி

பேசுபவர்: ஈ. வெ. கி. சம்பத்

★

குளித்தலை:

வ. உ. சி. சதுக்கத்தில்

28—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: தி. வீ. முத்துக்கிருஷ்ணன்

பேசுவோர்: ஈ. வெ. கி. சம்பத், எம். எஸ். மணி

★

மரமடக்கி:

அண்ணா திடலில் (சந்தைப்பேட்டைக்கு அருகில்)

தி மு. கழக 3-ம் ஆண்டு விழா

28-8-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: பொ. மு. சின்னையா

பேசுபவர்: க. அன்பழகன்

தமிழ்நாடு வர்த்தகக்கழகம்

பலகட்ட விற்பனைவரி எதிர்ப்பு மூன்றுவது மாநில மாநாடு

26—8—56 அன்று காலை 9 மணியளவில், எஸ். ஐ ஏ. ஏ. திடலில் மேற்படி மாநாடு நடைபெறும். விருதுநகர் வி. வி. சண்முக (நாடார்) தலைமை தாங்குவார்; திரு. எஸ். அனந்தராமகிருஷ்ணன் மாநாட்டைத் துவக்கி வைப்பார்; திருவாளர்கள் வி. வி. இராமசாமி, கேசவலால் காளிதாஸ் சேட், யூசுப் சேட் பெய்ஸ் முதலியோர் பேசுவர்.

சென்னை வர்த்தகர் மாநாட்டுக்குப்
பேராதரவு

காஞ்சிபுரத்தில் கடையடைப்பு— பொதுக்கூட்டம்

சென்னை, ஆக. 24—

சர்க்காரின் பலகட்ட விற்பனை வரியை எதிர்த்து நேற்று முழுவதும் காஞ்சிபுரத்தில் பூரண கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; சிற்றுண்டிச்சாலைகள், சிறுசிறு கடைகள்கூடத் திறந்திருக்கவில்லை.

பலகட்ட விற்பனை வரியை எதிர்த்தும், பொதுத் தேர்தலில் வர்த்தக சமுதாயம் ஈடுபடவேண்டிய அவசியம் குறித்தும், சென்னையில் நடைபெற இருக்கும் வர்த்தகர் மாநாட்டுக்கு ஆதரவு தரவேண்டியதின் அவசியம் குறித்தும் இங்கு நடைபெற்றப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசப்பட்டது.

பொதுக்கூட்டம், காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு எதிரில், காஞ்சி நகராண்மைக் கழகத் துணைத் தலைவர் திரு. எ கே. தங்கவேலர் தலைமையில் நடைபெற்றது. திரு வி. எஸ். விசுவநாதம், கி. ஆ. பெ. விசுவநாதம், வி. வி. இராமசாமி எம்.எல்.சி., கேசவலால் காளிதாஸ் சேட் ஆகியோர் பேசினர்.

ஆலந்தூர் தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம்

26-8-56 காலை 10 மணிக்கு ஆலந்தூர் தி. மு. கிளைக் கழகப் புதிய செயலாளரைத் தேர்ந்தெடுக்க, கழகப் பணிமனையில் கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை 1-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

27-8-56 இரவு 7 மணியளவில், கழகக் கட்டிடத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 27-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

26-8-56 காலை 10 மணியளவில், இடைப்பாளையம் பூக்கா நகர், பிள்ளையார்கோவில் தெரு, எண் 5 கழகப் பணிமனையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

மாயூரம்—சீர்காழி வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

26-8-56 மாலை 4 மணிக்கு மாயூரம் ஆசிரியர் வேலாயுதம் மன்றத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் முன்னிலையில், மாயூரம்—சீர்காழி வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

கோவை—முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

28-8-56 மாலை 7 மணியளவில், கோவை 27-வது வட்டம் இராமர் கோவில் வீதியில், தோழர் க ஆறுமுகம் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் எஸ். ஏ. இரசமாணிக்கம், இரா. கிருட்டிணன், ஈ. த. சண்முகம், இரா. நடராசன் ஆகியோர் பேசுவர்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'எதிர்ப்புகள்' எனும் தலைப்பில் மதுரையில் பேசிய சொற்பொழிவு ஒலிபரப்பப்படும்.

தொழிலாளர்பொதுக்கூட்டம்

26—8—56 மாலை 6 மணிக்கு, பெரம்பலூர் கடைத் தெரு, தோடி மைதானத்தில், திரு. பி. பி. பச்சமுத்து தலைமையில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெறும். 'மோட்டார் தொழிலாளர்கள்; ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர்கள் நிலை' என்பது குறித்துத் தோழர்கள் எம். எஸ் மணி, எஸ் கோபாலகிருஷ்ணன், பி. வி. பண்டரிநாதன், ஏ. சின்னத்தம்பி, பி. எம் கிருஷ்ணன், கோ. சிவப்பெருமாள், எம். குழந்தைவேல், ஓ நாராயணசாமி, என். அர்ச்சுனன் ஆகியோர் பேசுவர்.

திருமணங்கள்

26—8—56 காலை 9 மணிக்கு, சென்னை — திருவல்லிக்கேணி, வெங்கடாசல நாய்க்கன் தெரு, யாதவ சத்திரத்தில், தோழர் க. அப்பாதுரை தலைமையில் தோழர் மா. மோகன்—தோழியர் அம்சவல்லி திருமணம் நடைபெறும். தோழர் கண்ணதாசன் தோழியர் அலமேலு—அப்பாதுரை வாழ்த்துரை வழங்குவர்.

* * *

26—8—56 காலை 9 மணியளவில் சென்னை 7-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் வெ. வேந்தன்—தோழியர் கிருட்டிணவேணி; தோழர் ப. வெ குருசாமி—தோழியர் ஜெராஜ லட்சுமி ஆகியோர் திருமணம் விழுப்புரம் தாலுகா, வளவனூர் கரைமேட்டார் வீதி, எண் 8 இல்லத்தில் நடைபெறும்.

* * *

26-8-56 காலை 9 மணியளவில் சென்னை மூலக் கொத்தளம், சிதம்பரம் நகர், எண்-62 இல்லத்தில், தோழர் வி. முனுசாமி எம். சி தலைமையில், தோழர் என். ஏழுமலை—தோழியர் வள்ளியம்மாள் திருமணம் நடைபெறும்; தோழர் சி. பி. சிற்றரசு, தோழியர் சத்தியவாணிமுத்து வாழ்த்துரை வழங்குவர்.

தமிழ்ப்பெரியார் திரு. வி.க. பிறந்த நாள் விழா

26—8—56 மாலை 6 மணிக்கு சென்னை — திருவல்லிக்கேணி, மல்லன் பொன்னப்ப முதலி தெருவில், நடராசா கல்விக் கழகச் சார்பில், திரு. தி. ஜ. ர. தலைமையில், திரு. வி. க. பிறந்த நாள் விழா கொண்டாடப்பெறும். திரு மா. நன்னன், திரு. இராம சண்முகம் பேசுவர்.

சென்னை 31-வது வட்ட அழகிரி நினைவு மன்றம்

29-8-56 காலை 10 மணியளவில், மேற்படி மன்றப் பணிமனையில் (சென்னை—2, கோமளீசுவரன் பேட்டை, எண் 65/66, ஆரிஸ் வீதி), மன்றப்பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சென்னை 7-வது வட்ட அழகிரி மன்றம்

26-8-56 ஞாயிறு பிற்பகல் 1 மணியளவில், மன்றப் பொது உறுப்பினர் கூட்டமும், சொற்பயிற்சிக் கூட்டமும் நடைபெறும். பயிற்சிக் கூட்டத் தலைவர் பி. ஜோசப் தலைமையில் 'ஒற்றுமை' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்

சென்னை மணி அரசு மாணவர் மன்றம்

26—8—56 மாலை 6 மணிக்கு, திரு. எஸ். கே. சாகுல் அமீது தலைமையில், மேற்படி மன்றத்தில் கவிஞர் வேதநாயகம் பற்றி, தோழர்கள் முனுசாமி எஸ் ஏ எழில்மதி, வ. ந. குருபஞ்சராவ், க இளவரசு ஆகியோர் பேசுவர்.

சென்னைக் கல்விச் சங்கம்

26-8-56 மாலை 5 மணிக்கு பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட் ஆண் பள்ளியில், 'சொல்லும் செயலும்' என்னும் பொருள் பற்றி திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திருவாளர்கள் கு வே. இராமகோடி, வ. சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பூந்துறை அண்ணா படிப்பகத் திறப்பு விழா

26-8-56 மாலை 6 மணிக்கு, தோழர் பி கே. திருக்காமு தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் செ. கோவிந்தராசன் கொடியேற்றுவார்; தோழர்கள் கோ. பாண்டியன், ச. சிவப்பிரகாசம் ஆகியோர், முறையே அண்ணா உருவப்படத்தையும் படிப்பகத்தையும் திறந்து வைப்பார்கள்; தோழர் பி. தர்மலிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

பம்பாய் தி. மு. க. மத்தியக் குழு நிர்வாகிகள் தேர்தல் கூட்டம்

29—8—56 மாலை 5 மணியளவில், பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழு நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் தாராவி 'திராவிடாலத்'தில் நடைபெறும்; புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிளைப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன் என, ப. தி. மு. க. மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

துணைப் பொதுச்செயலாளர்
என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்:

ஆக. 26: காலை-திருக்கழுக் குன்றம்
பிற்பகல்-காஞ்சிபுரம்
27: தேனாம்பேட்டை
29: சென்னை பஸ் தொழிலாளர் சங்கபொதுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.